மறக்கப்பட்டுவிட்ட அரசியலமைப்பு பேரவை
பணிநிலை அறிக்கை
2008 ஜூன் 11

Previous Position Paper on 17th Amendment - 16th May 2008

[Download click here](http://tisrilanka.org/Position_Papers/10.htm)
http://tisrilanka.org/Position_Papers/10.htm

உள்ளடக்கம்


1. அறிமுகம்
2. நிறைவேற்று அணுகுமுறை
3. சிறுபான்மைக் கட்சிஅங்கத்தவர் நியமனம் தொடர்பான முரண்பாடுகள்
4. சமூக பொருளாதார அரசியல் பாதிப்பு
5. ஏனைய பாரதூரமான விளைவுகள்
6. பிற்குறிப்புகள்.
7. பின்னிணைப்பு


For TISL Position Papers:
http://www.tisrilanka.org/posi.htm


TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
Building a Nation of integrity

28/1, Bullers Lane, Colombo 07
Tel/Fax: 0112-501474, 0112-592287
Email: tisl@sltnet.lk
Web: http://www.tisrilanka.org





# மறக்கப்பட்டுவிட்ட அரசியலமைப்பு பேரவை

## 17வது அரசியல் சட்ட திருத்தம் அமுல்செய்யப்படாததன் விளைவுகள்: ஒரு பகுப்பாய்வு

1. அறிமுகம்

1972 அரசியலமைப்பு அரசாங்க பொது சேவைக்கு நியமனங்கள் செய்வதற்கு அரசியல் அதிகார பீடத்திற்கு அதிகாரங்களை வழங்கியது. 1978 அரசியலமைப்பிலும் அதே நிலை தொடர்ந்தது.அது அரசாங்க பொது சேவையின் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலானது.அரசாங்க பொது சேவை அரசியல் மயப்படுவதை தவிர்ப்பதற்காக உடனடிக்கவனம் செலுத்தப்பட்டது.2001, ஒக்டோபர் 3ம் திகதியன்று பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பிற்கான 17வது சட்டதிருத்தமானது தற்போதுள்ளதை விட கூடுதலான இலக்கையுடைய நடைமுறையை உருவாக்கியது. சந்திரிக்கா பண்டாரநாயக்க அரசாங்கம், மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவைப்பெற்றிருந்த காலத்தில்,அந்தத் திருத்தம் சிவில் சமூகத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டது.இந்தக்காலப்பகுதியில் ‘அரசாங்கம் பரீட்சார்த்த நிலையில்’[1]இருந்ததாக பெரிதும் கூறப்பட்டது.

இந்தத் திருத்தமானது, சபாநாயகர் ,பிரதம மந்திரி, எதிர்க்கட்சி தலைவர்,ஜனாதிபதியில் நியமிக்கப்படுபவர்,பிரதம மந்திரியும் எதிர்க்கட்சி தலைவரும் கூட்டாகப் பிரேரித்து ஜனாதிபதியால் நியமிக்கப்படும் 5 பேர்,பிரதமர் அல்லது எதிர்க்கட்சி தலைவர் அங்கத்துவம் வகிக்காத அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களில் பெருன்பான்மையேரரின் உடன்பாட்டுடன் நியமிக்கப்படும் ஒருவர்[1], ஆகியோரை உள்ளடக்கிய அரசியலமைப்பு பேரவையை ஜனாதிபதி நியமிப்பதற்கான அதிகாரத்தை வழங்கியுள்ளது.முன்னாள் உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்களின் பதவிக்காலம் 3 ஆண்டுகளாகும். அவர்களின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டதும் ஜனாதிபதி நியமனங்களை செய்ய வேண்டியது அவசியமாகும்.[1]

2002 மார்ச் 25 ல் முதலாவது அரசியலமைப்பு பேரவையை ஜனாதிபதி நியமித்தார். 17வது அரசியல் சட்டதிருத்தப் பிரகாரம் பல சுதந்திர ஆணைக்குழுக்களுடன் பேரவை செயற்படத்தொடங்கியது.[1]

பல சட்ட அதிகார சபைகளை கூடுதலான சுதந்திரமும் நம்பகத்தன்மையும் உள்ளதாகச்செய்யும் நோக்குடன் ,பரிபாலன சபைகளுக்கான நியமனதார்களைகளை பரிசீலனை செய்வதற்காக அரசியலமைப்பு பேரவைக்கு வழிமுறைகளை வழங்கும் விதத்தில் பல சட்டங்கள் மாற்றப்பட்டன.பின்வரும் மூன்று உதாரணங்கள் பரிசீலிக்கத்தக்கனவாகும்.

- நாணய சபைக்கான ஜனாதிபதியால் ,நியமிக்கப்படும் மூவரும் 2002 -32ம் இலக்க நாணயச்சட்ட (திருத்தம) CC பிரிவு 3(C) க்கு அமைய நிதி அமைச்சரின் விதந்துரையுடன் நியமனம் செய்யப்படல்.
- பொது வசதிகள் ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்கள் நியமனம் ,2002 இலக்கம் 35, CC பிரிவு 3(1)ற்கு அமைய அமைச்சரினால் செய்யப்படல்
- நலன்புரி சபைக்கு உறுப்பினர்கள் நியமனம் 2002 அதிகார சட்ட இல 24 C பிரிவு 4(2)ற்கு அமைய அமைச்சரின் ஆலோசனையுடன் செய்யப்படல்.[1]

## 2. நிறைவேற்று அணுகுமுறை

2005 மார்ச் மாதத்தில் அரசியலமைப்பு பேரவையின்,பதவிக்காலம் முடிவுற்றதால் 6 இடங்கள வெற்றிடமாகின[1].அரசியலமைப்பு பேரவை நியமிக்கப்படாததன் காரணம்,சிறுபான்மைக்கட்சிகளின் 'வேண்டுமென்றே செய்யப்பட்ட தாமதம் ' என்று ஜனாதிபதி சுட்டிகாட்டினார்[1].2006 பெப்ரவரி 1ம் திகதியில் பிரதம மந்திரியும், எதிர்க்கட்சித்தலைவரும் 5 அங்கத்தவர்களை நியமிக்கும்படி ஜனாதிபதிக்கு கடிதம் எழுதினர்[1]. ஆயினும் இது செவிடன் காதில் ஊதிய சங்காகியது. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும் (NPC) அரசாங்க பொது சேவை ஆணைக்குழுவும் (PSC)செயலற்றிருந்தன.இந்த இடைவெளியில் அமைச்சரவை எவ்வித சட்ட அதிகாரமுமின்றி , தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயற்பாடுகளையும்,அதிகாரங்களையும் பொலிஸ் மா அதிபரிடம் மாற்றுவதென்றும், அரசாங்க பொது சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்களை அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும், திணைக்களங்களின் தலைவர்களுக்கும் மாற்றுவதென்று தீர்மானித்தது.மேலும் ஜனாதிபதி ஒரு தலைப்பட்சமாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கும் பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கும் அங்கத்தவர்களை நியமிக்கவும் அதன் பின்னர் உயர் நீதிமன்ற நீதிபதிகள்,பொலிஸ் மா அதிபர் ஆகிய குறிப்பிட்ட நியமனங்களைச்செய்யவும் முற்பட்டமை கேள்விக்குரியதும் அரசயலமைப்பிற்கு முரணானதும் நடவடக்கையாக காணப்பட்டது.[1]

இதே வேளையில்,2006 ஜுலை 18 ல் அரசாங்கம் அரசியலமைப்பு விவகார அமைச்சர் டி.இ.டபிள்யூ குணசேகர, தலைமையிலான பாராளுமன்ற குறிப்பிட்ட பணிக்குரிய குழுவை அமைத்து 17வது அரசியல் சட்டதிருத்தத்தை மறுபரிசீலணை செய்து சீர்திருத்தங்களுக்கான ஆலோசனைகளை வழங்குமாறு பணித்தது. 2008 மார்ச் மாதத்தில் பிரியாணி விஜேசேகர, ஓய்வு பெற்றதனால் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் பதவி வெற்றிடமானது.இரு வாரங்களுக்கு ஒரு தடவை[1] செயற்படும் விதத்தில் அரசியலமைப்பு பேரவையின் செயலாளர்,தம்மிக்க கித்துல்கொடவை,ஜனாதிபதி தற்காலிகமாக நியமிக்க நடவடிக்கை எடுத்தார்.அரசியல்மைப்பு பேரவையின் செயலாளரினால்,அந்த நியமனம் உறுதி செய்யப்படவேண்டியுள்ளது.அவர் செயலாளராக நியமிக்கப்படும் வரை இந்தப் பதவியை வகித்ததால் இரு பொறுப்புகளுக்கிடையேயான சச்சரவுகளையும் முரண்பாட்டையும் காண்பிக்கிறது.[1]

2008 பெப்ரவரி மாதம் அரசியல் கட்சிகள் அரசியலமைப்பு பேரவைக்குள்ள தமது நியமனங்களை சபாநாயகரிடம் சமர்ப்பித்தன.நியமிக்கபட்ட அங்கத்தவர்களின் பெயர்கள் பின்வருமாறு,[1]

1. திரு நிஹால் செனவிரத்ன
2. திரு.ரஞ்சித் அபேசூரிய
3. திரு. சி.விக்னேஸ்வரன்
4. திரு.சிவகுமார் நடேசன்
5. பேராசிரியர் ஏ.எச்.செறிபுதீன்
6. திரு.எஸ்.மாயாதுன்ன

2008 மார்ச் மாதம் 19ம் திகதி எடுக்கப்பட்ட மற்றுமொரு ஆச்சரியகரமான முக்கிய நடவடிக்கையின் பிரகாரம், தெரிவுக்குழுவின்[1] அறிக்கை கிடைக்கப்பெறும் வரை, ஜனாதிபதி அரசியலமைப்பு பேரவையை நியமிக்க மாட்டார் என்று பிரதம மந்திரி தெரிவித்தார்.17வது அரசியல் சட்ட திருத்தத்தை பரிசீலிக்க நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு, ஒன்பது கூட்டங்களுக்கு பின்னர் விவரிவான திருத்தங்களை பரிந்துரைக்கும்இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்தது[1]. எனினும் 2008 மே 6ம் திததி ஜனாதிபதி பாராளுமன்றக் கூட்டத்தொடரை நீடித்துத் தெரிவுக் குழுவை கலைத்தார்.[1]

இதே வேளையில் ஜனாதிபதி, நான்கு உயர் நீதிமன்ற நீதிபதிகள்,[1] எட்டு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் பொலிஸ் மா அதிபர்(2) கணக்காளர் நாயகம்(2) சட்டமா அதிபர், தேசிய பொலிஸ் ஆணைக்குழு ,அரசாங்க சேவை ஆணைக்குழு, மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு(NHRC) ஆகியவற்றின் தலைவரும் அங்கத்தவர் ஆகியோரை நேரடியாக நியமித்தார்[1].(நியமனப்பட்டியல் பற்றிய விபரம் பின்னிணைப்பில் காணலாம்)

**ஆனால் பெரிதும் மதிக்கப்பட்ட கலாநிதி தீபிக உடகம, தரு. எஸ்.ஜீ.புஞ்சிஹேவா ஆகிய இருவரும் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்ட போது அரசியலமைப்பிற்கு முரணாக இந்த நியமனங்கள் அமைந்ததால் அவர்கள் இருவரும் அவற்றை ஏற்க மறுத்து விட்டனர்.**

## 3. சிறுபான்மைக்கட்சி அங்கத்தவர் நியமனம் தொடர்பான முரண்பாடுகள்

2005 ல் அரசாங்கம் இரு பிரதான கட்சிகளைக் கொண்டிருந்தது.மக்கள் முண்ணனி(PA),மக்கள் விடுதலை முண்ணனி(JVP) என்பன அந்தக் கட்சிகளாகும்.சிறுபான்மை கட்சிகளிலிருந்து நியமனம் செய்யப்பட்ட அங்கத்தவர் பற்றி முக்கியமாக பல்வேறு கருத்துக்கள் எழுந்ததால்,அரசியலமைப்பு பேரவைக்கு பாராளுமன்றத்திலான அங்கத்தவர் நியமனம் தாமதமாகியது.JVP தம்மை சிறுபான்மைக் கட்சியாக கருத வேண்டும் என்ற நிலையை கடைப்பிடித்தது. JVP ஆளும் கூட்டணியின் அங்கத்துவக் கட்சியானதால் இந்த நியமனங்களில் அது ஈடுபட முடியாது என்று சட்டமா அதிபர் தி. கமல சபேசன் கருத்து தெரிவித்தார்[1].அரசாங்கம் அக்கருத்தைப் புறக்கணித்தது.

## 4. நீதித்துறைச் சவால்கள்

அரசியலமைப்பு பேரவையை புறக்கணித்து ஜனாதிபதி உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தமையை எதிர்த்து சிறந்த பரிபாலனத்திற்கான பிரஜைகள் இயக்கத்தைச் சேர்ந்த (CIMOG) கலாநிதி விஸ்வலிங்கம் ,ஜெறி டீ சில்வா ஆகியோர் 2006 ஜூன் மாதத்தில் உயர் நீதிமன்றத்தில் மனுவை சமர்பித்தனர்.உயர் நீதிமன்றம் மனுதாரர்கள் நீதித்துறை வழிமுறையை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்தார்களா என்று அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டு , மனுவை நிராகரித்ததாக அறிவிக்கப்படுகிறது.[1]இதற்கு முன்பாக 2006 மார்ச் மாதத்தில் தேசிய பொலிஸ்ஆணைக்குழு(NPC) அரசாங்க பொது சேவை ஆணைக்குழுவிற்குமான(PSC) நியமனங்கள் பற்றி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்ட போது ஜனாதிபதியின் தீர்மானங்கள் கேள்விக்குட்படுத்தப்படமுடியாது எனப்பட்டு எழுத்தாணைக்கான மனு நிராகரிக்கப்பட்டது.[1]
25.07.2008 ல் திரு சுமணசிறி லியனகே, ஜனாதிபதியினால் அரசியலமைப்பு பேரவை அங்கத்தவர்கள் நியமிக்கப்படாமையை எதிர்த்து மற்றுமொரு அடிப்படை மனித உரிமைகள் மனுவை சமப்பித்தார். இந்த மனு மீது நீதிமன்றத்தில் இன்னமும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

## 5. சிவில் சமூக அமைப்புக்களின் பங்கு

தொழில்சார் அமைப்பின் தலையீட்டினால்(OPA) ஜேவிபியும் (ஆளும் கூட்டணியில் இருந்து அப்போது விலகியுள்ளது)தமிழ் கட்சிகளும், முன்னாள் கணக்காளர் நாயகமான திரு. எஸ். .மாயாதுன்னவை அரசியலமைப்பு பேரவைக்கு தமது நியமனதாராக ஏற்பதற்கு இணங்கின.[1]

சிவில் சமூகத்தலைவர்கள்.மதங்களின் காங்கிரஸ் உள்ளிட்ட மதத்தலைவர்கள்,வர்த்தகப் பேரவை என்பன, அரசியலமைப்பு பேரவையை நியமிப்பதில்லை என்ற ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தன.தொழில் சார் அமைப்பினால் இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணையைக் கொண்டு வருவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களை கேட்டுக்கொள்வதற்கு ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**6.சமூக பொருளாதார அரசியல் பாதிப்பு**

TISL புத்திஜீவிகளின ஒரு பகுதியினருடன்[1] தொடர்ந்து நேர்காணல்களையும் கலந்துரையாடல்களையும் நடத்தியது. இதன் மூலம் 17 வது அரசியல்சட்டதிருத்தம் அமுல் செய்யப்படாததால் பாரதூரமான அரசியல், பொருளாதார விளைவுகள் ஏற்படும் என்று கண்டு கொள்ள முடிந்தது.சமூகவியல் சிரேஷ்ட பேராசிரியர் ஒருவர், இந்த நிலைமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மக்களின் பெருன்பான்மையோருக்கு 17வது அரசியல்சட்டதிருத்தம் பற்றிய அறிவில்லை என்பதால் இதனாலான சமூகவியல் பாதிப்பு குறைவானதாகவேஇருக்கும் என்று கருத்து தெரிவித்தார்.ஊடக நிறுவனங்கள் வேறுபட்டிருப்பதால் 17வது அரசியல்சட்டதிருத்தம் பற்றி அறிவூட்ட அல்லது விவாதிக்க போதிய இடத்தை ஊடக நிலையங்களும், நிறுவனங்களும் வழங்கவில்லை என்று கூடுதலான புத்திஜீவிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.சிவில் சமூக முயற்சிகளின் பற்றாக்குறை பாராளுமன்றத்தில் இப்பொழுதுள்ள பலவீனமான எதிர்க்கட்சி, என்பன இந்த நிலைமைக்கு பெரும் பொறுப்பு வகிக்கின்றன.[1]

17வது அரசியல்சட்டதிருத்தம் அமுல்படுத்தப்படாமை நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்று பொருளியலாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். முறையற்ற நடைமுறைகள் நாட்டில் அரசியல் ஸ்திரமின்மையையும் பொருளாதார ஸ்திரமின்மையையும் புலப்படுத்துகிறது. இத்தகைய நிலைமையில் அரசாங்கமும், நாடும் நேர்மைத்திறனை இழக்க நேரிடும். இதனால் உள்ளூர் ,வெளிநாட்டு முதலீட்டைப் பாரதூரமாக பாதிக்கும்.வரிகளை அதிகரிப்பது போன்ற , நேரடியான அல்லது மறைமுகமான வழிகள் மூலம் வருமானத்தை ஏற்படுத்த அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் விதத்தில் வளர்ச்சியை மந்தமடையச் செய்யும் நாட்டின் பிரதான வர்த்தக நிலையமான இலங்கை வர்த்தக பேரவை,17வது அரசியல்சட்ட திருத்தத்தின் கீழ் முக்கிய அரசாங்க நிறுவனங்களில், நியமனங்களைச் செய்வதன் அவசியத்தை சுட்டிக்காட்டி உள்ளது.[1]

இது நாட்டில் அரசியல் ஸ்திரப்பாட்டை ஏற்படுத்தும் என்று அது தெரிவித்துள்ளது.அரசியல் கட்சிகள், ஊடகங்கள்,சிவில் அமைப்புக்கள் என்பனவற்றில் பிளவுகள் அரசாங்க அதிகாரத்தை, எதிர்ப்பதற்கு இருந்த கடப்பாடுகளை அழித்து பலவீனமான குரலை உருவாக்கி உள்ளது. அமைப்பில் இனங்காணப்பட்டுள்ள பல்வேறு பலவீனங்கள் முன்னைய அரசாங்கத்தினால் நீக்கப்படாமையால் இத்தகைய நிலைமை எழுவதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும்.[1]தற்போதுள்ள அரசியலமைப்பு ஏற்பாடுகள் அமுல் செய்யப்படாமை சீரழிவுள்ள நிலைமையை மேலும் மோசமாக்குவதற்கு காரணமாகியுள்ளது.

**7. இலங்கையின் சர்வதேச நன்மதிப்பு**

17வது அரசியல்சட்ட திருத்தமானது,நாட்டின் நம்பகத்தன்மைக்கு சவால்விடும் விதத்தில் சர்வதேச அரங்குகளில் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது. இலங்கைக்கு GSP அந்தஸ்து[1] வழங்கப்படுவதில் பல்வேறு சர்வதேசக்கோட்பாடுகளுக்கான இணக்கம் கவனத்திற் கொள்ளப்படும்[1]. பல அவதானிகளின் கருத்துப்படி 17 வது அரசியல் சட்டதிருத்தத்திற்கு முரணாக நாட்டின் பல முக்கிய பதவிகளுக்கும் ,அரசியலமைப்பிற்கு உட்படாத நியமனங்கள் செய்வது போன்ற அரசியலமைப்பு மீறல்கள் தொடர்ந்து மீறப்படல், சட்டவாட்சியை பேணுவதில் அரச தரப்பில் இயலாமை காணப்படுவதாக சர்வதேசரீதியாக கருதப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் விசேட பேச்சாளர்களான பிலிப் அல்ஸ்ரன்,மானபறெட் ஆநாவாக், மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர், மனித உரிமைகள் ஊக்குவிப்பு பாதுகாப்பிற்பான தேசிய நிறுவனத்தின் ஒருங்கிணைப்புக்குழு[1] என்பன 17 வது அரசியல்சட்டதிருத்தம் அமுல்செய்யப்படாமையினால்[1] சுதந்திர ஆணைக்குழுவின் கேள்விக்குரிய நிலைமை குறித்து கேள்வி எழுப்பியுள்ளன.பல அறிக்கைகளில் மனித உரிமைகள் நோக்கல்[1](Human Rights Watch),பொதுநலவாய மனித உரிமைகள் செயற்பாட்டாளர்[1](The Common Wealth Human Rights Initiatives) ஆசிய மனித உரிமை ஆணைக்குழு[1](Asian Human Right Commossion) என்பன இலங்கையில் அரசியலமைப்பிற்கு முரணான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதை குறித்து சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளன. இத்தகைய நடைமுறைகளைப் பற்றி கவனத்தில் எடுத்து அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு அவை கேட்டுள்ளன.சர்வதேச மட்டத்தில் தங்களுடைய நிலைப்பாட்டை உணர்ந்து,ஐக்கிய நாடுகளின் "Universal period Review"ல் இலங்கை அரசாங்கம் தாமாகவே முன்வந்து அரசியலமைப்பு பேரவையை மீள் பரிசீலனை செய்து மீண்டும் செயல்படச்செய்வதாக உறுதிமொழி அழித்தது[1].ஆனால் இலங்கை அரசாங்கம் கொடுத்தஉறுதிமொழியை புறக்கணித்து அரசியலமைப்பு பேரவையை மீள் பரிசீலனம் செய்து செயல்படசெய்ய எந்தவொரு நடவடிக்ககைகளிலும் கவனம் செலுத்தவில்லை.இதனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையில் இலங்கைக்கு ஒரு ஆசனம் கிடைக்கத்தவறியமைக்கு அரசியலமைப்பு பேரவையை நியமிக்கத்தவறியமையே காரணமாக இருக்கலாம் என்று கருதுவது பொருத்தமானதாகும்.[1]

8.ஏனைய பாரதூரமான விளைவுகள்

அரசாங்கத்தினதும், ஜனாதிபதியினதும் நடத்தை. தேர்தல் வன்முறை பொலிஸில் நேர்மைத்திறன் சீரழிவு, அரசாங்க சேவையும் ஏனையவையும் அரசியல்மயமாக்கப்படுதல் என்பன தொடர்ந்து விமர்சனத்திற்குள்ளாகி பல முக்கிய கேள்விகளை எழுப்பியுள்ளது

8.1 **தேர்தல் வழிமுறையின் நம்பகத்தன்மை இழத்தல்**

17வது அரசியல்சட்ட திருத்தம் கொண்டுவரப்பட்ட பின்னர் தேர்தல் ஆணைக்குழுவிற்கு முதற் தடவையாக நியமனம் செய்யப்படுகையில், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அரசியலமைப்பு பேரவையின் விதந்துரையை ஏற்க மறுத்து விட்டார்.தற்போதைய தேர்தல் ஆணையாளர் ஓய்வு பெறும் 60 வயதை அடைந்த போதிலும் ஓய்வு பெற முடியவில்லை.இலங்கை உயர் நீதிமன்றத்தில் அது தொடர்பான கேள்வி எழுப்பப்பட்ட போது ,நீதிமன்றம் ஆணையாளர் 'அரசியல் யாப்பு நெறியிலிருந்து விலகியதால் ஓய்வு பெற முடியவில்லை என்றும் அதனால் 2003 ல் உயர் நீதிமன்றத்தால் இவ்விடயத்தில் தலையிடமுடியவில்லை என்றும் தீர்பபளித்தது[1].இது தேர்தல் ஆணைக்குழுவின் வினைத்திறன் மீதுகடும் பாதிப்பை ஏறபடுத்தியது. ஜனாதிபதி தன்னிச்சையாகவும், ஒருதலைப்பட்சமாகவும் மற்றுமொரு குழுவினரை தேர்தல் ஆணைக்குழுவிற்கு தெரிவு செய்யும் சாத்தியமும் ஏற்பட்டுள்ளது.

8.2 **பொலிஸாரின் நேர்மைத்திறன் சீரழவிற்குட்படுதல்.**

2006 ஏப்ரல் மாதத்தில் ஜனாதிபதியினால் நேரடியாக அரசியலமைப்பிற்கு அமையாத விதத்தில் நியமனங்கள் செய்யப்பட்ட பின்னர், பொலிஸார் மீதான நம்பகத்தன்மை பொதுமக்களின் பார்வையில் சீர்குலையத்தொடங்கியது.ஆணைக்குழுவில் நியமிக்கப்பட்ட எந்தவொரு அங்கத்தவரும்,அவரது தகுதி, நேர்மைத்திறன் அல்லது நலன்களில் சாத்தியமான வேறுபாடுகள் என்பன பற்றி அரசியமைப்பு ரீதியாக கணிக்கப்படவில்லை[1].
நிலைமையை மேலும் மோசமாக்குவது போன்று, இரு பொலிஸ் மா அதிபர்கள் அரசியலமைப்பைக் கணக்கிலெடுக்காது,ஜனாதிபதியால் நேரடியாக நியமிக்கப்பட்டனர்.பொலிஸார் தனது நேர்மைத்திறனை இழப்பதற்கு இது வகை செய்தது.காணாமல் போவது தொடர்பாக பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற தொடர் குற்றச்சாட்டுக்கள், 17 வது அரசியல்சட்டதிருத்தத்தில் தெரிவிக்கப்பட்டவாறு சுதந்திர பொலிஸ் ஆணைக்குழுவின் அவசியத்தை மீண்டும் உறுதிப்படுத்துகிறது[1].

8.3 **அரசாங்க பொது சேவையை அரசியல் மயமாக்கல் நீடிக்கப்படுதல்**

17வது அரசியல் சட்ட திருத்தத்திற்கு அமைய அமைப்பின் நடைமுறைகளுக்கு மறுப்பு தெரிவிக்கின்றமை, அரசாங்கம் நாட்டில் அரசாங்க பொது சேவையை மேலும் அரசியல் மயமாக்கும் நோக்கத்தை கொண்டிருப்பதைத் தெளிவாகக் காண்பிக்கின்ற.முழு அரசாங்க பொது சேவைக்குமான நேர்மைத்திறனிற்கும் பொறுப்பாகவுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு ஜனாதிபதி ஒரு தலைப்பட்சமாக அங்கத்தவர்களை நியமனம் செய்துள்ளார்.இந்த அரசியலமைப்பு முறையற்ற நியமனத்தின் மோசமான விளைவாக "முழு அரசாங்க சேவையின் சட்டவலிதாந்தன்மை" உள்ளது.அரசாங்க சேவை ஆணைக்குழு அங்கத்தவர்களின் நியமனம் அரசியலமைபபிற்கு முரணானதாக உள்ளதால் அவர்கள் எடுக்கும் சகல தீர்மானங்களிற்கும் அரசியலமைப்பிற்கு முரணானவை என்று விவாதிக்கப்படக்கூடும். அரசாங்க அதிகாரிகள், அவர்களின் சட்ட விரோத நடவடிக்கை அல்லது தவறானசெயல்கள் என்பனவற்றை விசாரிக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தார்மீக அதிகாரம் ஒரு பிரச்சனையாகியுள்ளது

**9. முடிவுரை**

17வது திருத்தம் அமுல்செய்யப்படாமை முன் எப்போதும் இல்லாத அரசியலமைப்பு சமூக பொருளாதார விவகாரங்களில் தாக்கங்களை உருவாக்கியிருப்பதுடன் நாட்டின் நற்மதிப்பையும் பாதித்துள்ளது.இது நேரடி சட்டவாட்சிப் பிரச்சினையாதலால் பொதுமக்கள், நாட்டின் அரசியலமைப்பு முறையிலான பரிபாலனத்தில் நம்பிக்கையை இழந்து வருகின்றனர்.17வது சட்டதிருத்தத்தை மேலும் பரிசீலனை செய்ய வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில் TISL அரசியலமைப்பு பேரவைக்கு நியமனங்கள் செய்து நாட்டில் அரசியலமைப்பு முறையிலான பரிபாலனத்தை திரும்பவும் ஏற்படுத்த வழியமைக்கும் விதத்தில் ஜனாதிபதி அரசியலமைப்பு பேரவைக்கு நியமனங்கள் செய்யும் கட்டாய அரசியலமைப்பு கடமையை கொண்டிருப்பதாக திடமாக நம்புகிறது.

## End Notes

[1] Official Hansard dated 24th September 2001.

[2] See Article 41 of the 17th Amendment.

[3] Article 41A sub clause 4 of the Constitution.

[4]http://www.priu.gov.lk/news_update/Current_Affairs/ca200203/20020325constitutional_council.htm

[5]http://www.cbsl.gov.lk/info/03_about/a_5.htm# .

[6] Kishali Pinto Jayawardena, "An unfulfilled Promise; Critical Scrutiny of the National Police Commission of Sri Lanka, *LST Review,* Vol .18, issue 238, page 14, August 2007.

[7]*Id.* Also see http://www.nation.lk/2008/02/24/edit.htm Senior Lecturer, Rohan Edirisinghe opined that if the President was actually keen to appoint the Constitutional Council, he could have appointed the nine members who have been nominated as the required quorum for the functioning of the Constitutional Council is six members. *C.f. Ravaya,* 23.4.2006.

[8] Hansard, Vol 174 issue No. 7, page 880.

[9] http://www.themorningleader.lk/20080319/news.html

[10] As per Article 41C (2) of the 17th Amendment

[11] http://www.parliament.lk/secretariat/secretary_general.jsp and http://www.parliament.lk/handbook_of_parliament/secretaries_general.jsp

[12] Refer http://www.thesundayleader.lk Also see Hansard, Vol 174 issue No. 7, page 880, 881.

[13] http://www.dailynews.lk/2008/03/19/pol01.asp

[14] "Interim Report of the Select Committee of Parliament on the 17th Amendment to the Constitution", *LST Review,* Vol .18, issue 238, page 1. August 2007.

[15]http://www.priu.gov.lk/news_update/Current_Affairs/ca200805/20080507parliament_prorogued.htm

[16] See also http://www.bbc.co.uk/sinhala/news/story/2006/06/060630_court_appointments.shtml

[17]See Annexure for all the appointments.

[18]http://www.bbc.co.uk/sinhala/news/story/2006/06/060630_court_appointments.shtml .

[19]http://www.bbc.co.uk/sinhala/news/story/2006/06/060630_court_appointments.shtml

[20]http://www.dailymirror.lk/2006/06/03/news/12.asp

[21] See http://www.thesundayleader.lk/20080203/Issues.htm This nomination was criticized by the Government citing conflict of interest as S.G. Mayadunne was a consultant to the COPE Committee in Parliament who is appointed by the Secretary General of Parliament. This appointment was up for consideration by the CC.

[22] The interviews with few professionals, academics, economists and business leaders were conducted on the basis of anonymity.

[23] The loss of credibility of the media due to the biased nature in presenting facts to the people. It is alleged that civil society organizations have been intimidated and silenced by extremist political elements that have persecuted those who have dissented to acts such as the non-implementation of the 17th Amendment.

[24] http://www.lankanewspapers.com/news/2005/8/2915.html

[25] Reforms in the electoral system, constitutional reforms, and educational reforms have not been addressed and as a result are affecting the forces that were necessary to act as a check on State power.

[26] This is a concession that is provided to only 12 countries in the world by the European Union exempting a selected country from various tariffs on export garments

[27] There are more than 500,000 people employed in the export garments trade. This concession was given to the export garments industry, which has benefited from the concession and has affected their growth at large. With the imminent threat of revocation, the process of laying off has taken place in order to absorb the impact of a possible revocation. A pre-condition for such concessions is the commitment to the protection of human rights and compliance to conventions.

[28]This organization accredits the local Human Rights Commission. In their 2007 report, the Committee had downgraded Sri Lanka's Human Rights Commission to the status of observer due to the lack of independence and the appointments that have been made flouting the Constitution.

[29] See report of the Special Rapporteurs, Philip Alston, Extrajudicial, summary or arbitrary execution, Economic and Social Council, United Nations, E/CN.4/2006/53/Add.5. http://www.unhchr.ch/huricane/huricane.nsf/view

[30]http://www.hrw.org/effectiveHRC/SriLanka/factandfiction.html & the letter to the Human Rights Council by various international organizations and NGOs at http://www.hrw.org/effectiveHRC/SriLanka/INGOletter.html

[31]See http://www.humanrightsinitiative.org/publications/nl/newsletter_summer_2006/article4.htm

[32] See http://www.ahrchk.net/statements/mainfile.php/2006statements/432/

[33] UN General Assembly (A/62/778 - 1st April 2008) Annex to the letter dated 31st March 2008 from Permanent Representative of Sri Lanka to President of UN General Assembly.

[34] http://www.hrw.org/effectiveHRC/SriLanka/factandfiction.html

[35] http://news.bbc.co.uk/2/hi/south_asia/4278216.stm

[36] Arbitrary appointments made without appointing and seeking the approval of the Constitutional Council to the NPC in April 2006 by the President.

[37] See reports of the United Nations Special Rapporteurs and other Human Rights agencies cited above from footnotes.

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
Building a Nation of integrity

## ANNEXURE - Table of appointments made outside the 17th Amendment

### APPOINTMENTS MADE WITHOUT BEING SCRUTINIZED BY THE CONSTITUTIONAL COUNCIL

| PUBLIC OFFICIALS (IGPS, ATTORNEY GENERAL AND AUDITOR GENERALS) | | |
|---|---|---|
| **Name** | **Date of Appointment** | **Appointed** |
| S. Sarnajothi | 3rd January 2008 | Auditor General |
| Jayantha Wickremeratne | Assumed duties on 1st June 2008 | Inspector General of Police |
| C.R. De Silva | 7th April 2007 | Attorney General |
| P.A. Prematilleke | 23rd October 2006 | Auditor General |
| Victor Perera | 4th October 2006 | Inspector General of Police |

| APPOINTMENTS TO INDEPENDENT COMMISSIONS | | |
|---|---|---|
| **Name** | **Date of Appointment** | **Appointed** |
| Nevil Piyadigama | April 2006 | Chairman, National Police Commission |
| Ven. Elle Gunawansa | April 2006 | Member, National Police Commission |
| Justice Chandradasa Nanayakkara | April 2006 | Member, National Police Commission |
| Nimal Punchihewa | April 2006 | Member, National Police Commission |
| R. Shivaraman | April 2006 | Member, National Police Commission |
| Javed Ysuf | April 2006 | Member, National Police Commission |
| Sharmaine Madurusinghe | April 2006 | Member, National Police Commission |
| Justice Priyantha Perera | April 2006 | Member, Public Services Commission |
| Gunapala Wickramaratne | April 2006 | Member, Public Services Commission |
| Mr. H.H Mukiya | April 2006 | Member, Public Services Commission |
| Dr. W.P.S Jayasundera | April 2006 | Member, Public Services Commission |
| Dr. Bernard Zoysa | April 2006 | Member, Public Services Commission |
| Dr. Palitha Kumarasinghe | April 2006 | Member, Public Services Commission |
| Prof. Dayasiri Fernando | April 2006 | Member, Public Services Commission |
| Srima Wijeratne | April 2006 | Member, Public Services Commission |
| Mendis Roharadeera | April 2006 | Member, Public Services Commission |
| Justice Ananda Coomaraswamy | December 2006 | Chairman Human Rights Commission |
| Justice D. Jayewickreme | May 2006 | Member, Human Rights Commission |
| Nalini Abeywardena | May 2006 | Member, Human Rights Commission |
| M.T.M Bafiq | May 2006 | Member, Human Rights Commission |
| Mahanama Tillekeratne | May 2006 | Member, Human Rights Commission |

| MONETARY BOARD, CENTRAL BANK OF SRI LANKA | | |
|---|---|---|
| **Name** | **Date of Appointment** | **Appointed** |
| Manohari Ramanathan | 6th November 2007 | Member, Monetary Board, Central Bank of Sri Lanka |
| Nimal Welgama | 3rd July 2006 | Member, Monetary Board, Central Bank of Sri Lanka |

| JUDGES, SUPREME COURT/ COURT OF APPEAL | | |
|---|---|---|
| **Name** | **Date of Appointment** | **Appointed** |
| Justice P.A. Ratanayake | May 2008 | Supreme Court Judge |
| Justice K. Sripavan | 28th March 2008 | Supreme Court Judge |
| Justice Jagath Balapatabendi | 13th December 2007 | Supreme Court Judge |
| Justice Andrew Somawansa | 29th May 2006 | Supreme Court |
| Justice Chandra Ekanayake | 27th March 2008 | President, Court of Appeal |
| Justice Upali Abeyratne | 27th March 2008 | Court of Appeal Judge |
| Justice K. Sripavan | 6th March 2007 | President, Court of Appeal |
| Justice Puvalasiri Wijayaratne | 13th December 2007 | President, Court of Appeal |
| Justice A.W.A Salam | 6th March 2007 | Court of Appeal Judge |
| Justice Anil Gooneratne | 5th January 2007 | Court of Appeal Judge |
| Justice Jagath Balapatabendi | 29th May 2006 | Court of Appeal Judge |
| Justice Rohini Perera | 29th May 2006 | Court of Appeal Judge |
| Justice Sarath de Abrew | 29th May 2006 | Court of Appeal Judge |